**துணை ஆணையாளர்–1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம், சென்னை–5, அவர்களின் செயல்முறை ஆணைகள்.**
**முன்னிலை: திரு.ம.கா. அம்பேத்கார், பி.எஸ்.சி.,**

செ.மு.ஆ.எண்.அ4/4554/2019 நாள் : 13.09.2019

பொருள் : நிர்வாகம் – உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – பணித்தொகுதி–IV – 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை–3) பட்டியல் பெறப்பட்டது – பணி நியமனம் வழங்கப்பட்டது – பணி வரன்முறைப் படுத்துதல் – ஆணைபிறப்பித்தல்.

பார்வை : 1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண். 1512/PSD-B/2019, நாள்: 18.02.2019.
2. இணை ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செ.மு.ஆ. எண்.அ4/4554/2019, நாள்: 26.02.2019.

----------

**ஆணை:**

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் வாயிலாக இத்துறைக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை–3) பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களுக்கு, பார்வை 2ல் கண்டுள்ள செயல்முறை ஆணைகளில் சுருக்கெழுத்து தட்டச்சர்களாக பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

அவ்வாறு பணி நியமனம் வழங்கப்பட்ட நபர்களில், இத்துறைப்பணியில் சேர்ந்து சுருக்கெழுத்து தட்டச்சர்களாக (நிலை–3) பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் நபர்களுக்கு, சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை–3) பதவியில் அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில், சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 காலங்களுக்கான தொகுதி–IV பணி நியமனம் குறித்த ரிட் மனுக்களில் பிரகடனப்படுத்தப்படும் தீர்ப்பு முடிவுக்கு உட்பட்டு, நிபந்தனை அடிப்படையில், பணி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ.எண். | சுருக்கெழுத்து தட்டச்சர்களின் பெயர் (தி/எ்) | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1, | M.R. கவிதா | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 2. | C. கார்த்திகா | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 3. | S. பேராத்துசெல்வி | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 4. | S.R. கலைவாணி | 01.03.2019 மு.ப. | 01.03.2019 மு.ப. |
| 5. | K. முருகேசன் | 06.03.2019 மு.ப. | 06.03.2019 மு.ப. |
| 6. | S. சாந்தஷீலா | 08.03.2019 மு.ப. | 08.03.2019 மு.ப. |
| 7. | K. சகாதேவன் | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 8. | P. பவித்ரா | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 9. | P. துர்காதேவி | 08.03.2019 மு.ப. | 08.03.2019 மு.ப. |
| 10. | M. சரண்யா | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |

பணி வரன்முறை செய்யப்படும் தேதியிலிருந்து மூன்றாண்டு கால தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவகாலத்தில் வைத்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

தகுதிகாண் பருவகாலத்திற்குள், தொழில்நுட்ப கல்வித்துறையினரால் நடத்தப்பெறும் Certificate Course in Computer on Office Automation பயிற்சியினை முடிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

ஒம்/–ம.கா. அம்பேத்கார்
துணை ஆணையாளர்–1

பெறுநர்
சம்பந்தப்பட்ட சுருக்கெழுத்து தட்டச்சர்கள் (நிலை–3)

நகல்
1. ஆணையாளர்/இணை ஆணையாளர்(பொ) அவர்களின் மேசைக்கு
2. துணை ஆணையாளர்–1 / துணை ஆணையாளர்–2 / உதவி ஆணையாளர்–1 / உதவி ஆணையாளர் –2, ஆணையாளர் அலுவலகம் .
3. துணை ஆணையாளர் (நகரம்)வடக்கு/தெற்கு, சென்னை – 5.
4. உதவி ஆணையாளர், மயிலாப்பூர், ஆர்.கே. நகர், சிதம்பரனார், சோழங்கநல்லூர், வில்லிவாக்கம், சேப்பாக்கம் மற்றும் சைதாப்பேட்டை மண்டலங்கள்
5. கண்காணிப்பாளர், ச பிரிவு, ஆணையாளர் அலுவலகம்.
6. அ4 இருப்பு கோப்பு

துணை ஆணையாளர்–1க்காக
16/9/19

16/9/19